செய்தி வெளியீடு எண்: 510 நாள்: 09.03.2024

<u>செய்தி வெளியீடு</u>

# தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ரூ.172.72 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 1520 குடியிருப்புகள் மற்றும் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் ரூ.108.62 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் 8.3.2024 அன்று தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 172 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 1520 குடியிருப்புகளையும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் 108 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகள் ஆகியவற்றை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார்.

## <u>தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரிய புதிய குடியிருப்புகளை திறந்து வைத்தல்</u>

அனைவருக்கும் வீட்டுவசதி திட்டத்தின் கீழ் சென்னையில் பெரியார் நகர் திட்டப்பகுதியில் பழுதடைந்த பழைய குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, மறுகட்டுமான திட்டத்தின் கீழ் தரை மற்றும் ஐந்து தளங்களுடன் 62 கோடியே 88 இலட்சம் ரூபாய் செலவில் 480 புதிய குடியிருப்புகள்;

மதுரை மாவட்டம், மஞ்சள்மேடு திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 37 கோடியே 25 இலட்சம் ரூபாய் செலவில் 320 அடுக்குமாடி குடியிருப்புகள்;

புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 27 கோடியே 6 இலட்சம் ரூபாய் செலவில் 264 அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் அறந்தாங்கி திட்டப்பகுதியில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் 13 கோடியே 8 இலட்சம் ரூபாய் செலவில் 120 புதிய குடியிருப்புகள்;

தேனி மாவட்டம், மீனாட்சிபுரம் திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 24 கோடியே 41 இலட்சம் ரூபாய் செலவில் 240 அடுக்குமாடி குடியிருப்புகள்;

தஞ்சாவூர் மாவட்டம், மகாராஜசமுத்திரம் திட்டப்பகுதியில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் 8 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் 96 அடுக்குமாடி குடியிருப்புகள்;

**என மொத்தம் 172 கோடியே 72 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள 1520 குடியிருப்புகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

இன்றைய தினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டுள்ள இப்புதிய குடியிருப்புகள், ஒவ்வொன்றும் தலா 400 சதுர அடி பரப்பளவுடன், ஒரு பல்நோக்கு அறை, படுக்கை அறை, சமையல் அறை மற்றும் கழிவறை ஆகிய வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது. மேலும், அனைத்து குடியிருப்பு வளாகங்களும், சாலை வசதி, குடிநீர் வசதி, கழிவு நீரேற்று வசதி, மழைநீர் சேகரிப்பு கட்டமைப்பு ஆகிய வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. "நம் குடியிருப்பு, நம் பொறுப்பு" திட்டத்தின் கீழ் அனைத்து திட்டப்பகுதிகளிலும் குடியிருப்போர் நலச்சங்கங்கள் உருவாக்கப்பட்டு வருகிறது.

**இவ்வரசு பொறுப்பேற்றதிலிருந்து இதுநாள்வரை தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 88 திட்டப் பகுதிகளில் 3046.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 27,260 அடுக்குமாடி குடியிருப்புகள் வீடற்ற ஏழை எளிய மக்களுக்காகவும், குடிசைப் பகுதிகளில் வாழும் மக்களுக்காகவும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.**

**<u>தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகள் மற்றும் தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகை குடியிருப்புகளை திறந்து வைத்தல்</u>**

சென்னை மாவட்டம், ஜாபர்கான்பேட்டையில் 48 கோடியே 70 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 120 மத்திய வருவாய் பிரிவு அடுக்குமாடி குடியிருப்புகள்;

தமிழ்நாடு அரசு அலுவலர் வாடகைக் குடியிருப்பு திட்டத்தின் கீழ், மதுரை மாவட்டம், தல்லாகுளத்தில், 59 கோடியே 92 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 224 அடுக்குமாடிக் குடியிருப்புகள்;

**என மொத்தம் 108 கோடியே 62 இலட்சம் ரூபாய் செலவில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.**

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, இ.ஆ.ப., தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் திரு. பூச்சி எஸ்.முருகன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் செயலாளர் திருமதி எம். விஜயலட்சுமி, இ.ஆ.ப., தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் டாக்டர்.சு.பிரபாகர், இ.ஆ.ப., இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர்.க.விஜயகார்த்திகேயன் இ.ஆ.ப., ஆகியோர் கலந்துக் கொண்டனர்.

..........

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in